<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 50/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாதையன் | நாள் | 19.09.2024 |
| தகப்பனார் பெயர் | பொன்னப்பன் | | |

<u>பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

16) என்னுடைய நிலத்தையும், பிரதிவாதியின் நிலத்தையும் பிரிக்கும் கல்கறையை நான் அமைத்தேனா என்றால், இல்லை. எங்களது சொத்தை என் தந்தை கிரயம் பெறும் பொழுதே மேற்படி கல்கறை இருந்தது. எனது நிலம் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ளது என்றாலும், பிரதிவாதியின் நிலம் பள்ளத்தில் அமைந்துள்ளது என்றாலும், சரிதான்.

17) நான் சொல்வது போல் பிரதிவாதி என் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்றால், மேற்படி கற்கறைகளை அகற்றிவிட்டுதான் ஆக்கிரமிப்பு செய்ய முடியும் என்றால், எனது நிலம் பகுதி பள்ளத்திலும், பகுதி மேட்டிலும் உள்ளது. அவ்வாறுள்ள நிலையில், என்னுடைய வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ பிரதிவாதி கல்கறையை அகற்றியதாக நான் ஏதேனும் கூறியுள்ளேனா என்றால், இல்லை.

18) எனது சொத்து அமைந்துள்ள ச.எண்.37/A ல் என் தந்தை 1 ஏக்கர் நிலத்தை தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றால், சரிதான். ஆனால், வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி என் தந்தை எனக்கு ஒரு ஏக்கர் இரண்டு சென்ட் நிலத்தை தானமாக கொடுத்துள்ளார் என்றால், சரிதான். அதாவது என் தந்தைக்கு கிரயப்படி பாத்தியப்பட்ட சொத்தை விட கூடுதலாக இரண்டு சென்ட் நிலத்தை எனக்கு தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளார் என்றால், சரிதான்.

19) என் தந்தை கிரயம் பெற்ற மேற்படி ச.எண்.37/A ல் உள்ள 1 ஏக்கர் நிலத்தை சுற்றிலும் எவ்வித புறம்போக்கு நிலங்களும் இல்லாத நிலையில், எவ்வாறு கூடுதலாக

இரண்டு சென்ட் நிலத்தை என் தந்தை எனக்கு தானமாக வழங்கியுள்ளார் என வா.சா.ஆ.1 ஆவணத்தில் கூறியுள்ளாரா என்றால், பட்டாபடி தனக்கு பாத்தியப்பட்டதாக கூறியுள்ளார். என் தந்தைக்கு மேற்படி அவரது பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் ஒரு ஏக்கர் மட்டுமே பாத்தியப்பட்டுள்ள நிலையில், மேற்படி ஆவணத்திற்கு முரணாக என் பெயரில் கூடுதலாக இரண்டு சென்ட் நிலத்தை தானசெட்டில்மெண்ட் அளித்துள்ளதால், மேற்படி வா.சா.ஆ.1 ஆவணமே தவறானது என்றாலும், செல்லாதது என்றாலும், சரியல்ல.

20) என் பெயரில் அளிக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில், பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு மேற்படி சொத்துக்களை அளந்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால் பட்டா மாற்றம் செய்ததற்கு பின்னிட்டு அளந்தேன். ஏற்கனவே என் தந்தை பெயரில் என்ன பட்டா இருந்ததோ அதை என் பெயரில் மாற்றிக்கொண்டேன் என்றால், சரிதான். அவ்வாறுள்ள நிலையில், என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொத்தை அளந்து, பின் பட்டா மாற்றம் செய்தேன் என நான் சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான்.

21) முறையாக நான் வருவாய் துறையில் பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பித்திருந்தால், அவர்கள் தாவா சொத்தை அளந்து பார்த்து, பின் பட்டா மாறுதல் செய்திருப்பார்கள் என்றால், சரிதான். அவ்வாறு நான் முறையாக அளந்து பட்டா மாறுதல் செய்யாததால்தான் எவ்வித பட்டா மாறுதல் உத்தரவுகளையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் பட்டா மாறுதல் செய்ததற்கு பின்னிட்டு பிரதிவாதிக்கு நிலம் அதிகமாக உள்ளது என ஆட்சேபித்ததால், பிரதிவாதி தரப்பில் நிலத்தை அளக்க மனு செய்து, நில அளவையர் பிரதிவாதியின் சொத்தை அளந்தார் என்றால், சரிதான்.

22) அவ்வாறு நில அளவையர் நிலத்தை அளக்கும் பொழுது அளவுகளில் சற்று மாறுபாடு இருந்ததால், பிரதிவாதி அது தொடர்பாக ஆட்சேபனை செய்தார் என்றால், சரிதான். மேற்படி நில அளவையர் அளந்த பொழுது என்னுடைய நிலத்தை பிரதிவாதி

ஆக்கிரமிப்பு ஏதேனும் செய்துள்ளதாக தெரிவித்தாரா என்றால், இல்லை. ஆனால், நில அளவையர் அளக்கும் பொழுது பிரதிவாதியின் நிலம் மேற்படி கல்கறைக்கும் கீழ் வந்தது. பிரதிவாதி தன் பதிலுரையிலேயே ச.எண்.37/3 ற்குரிய புலவரைபடத்தில் பிரதிவாதியின் நிலத்தை பொறுத்து, அளவுகளை திருத்தியது தவறானது என கூறியுள்ளார் என்றால், சரிதான்.

23) மேற்படி பதிலுரைக்கு மறுப்புரை ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதேபோல் என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் மேற்படி சங்கதியை நான் மறுத்துரைக்கவில்லை என்றால், சரிதான்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.